# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி அவர்களின் கொடிநாள் செய்தி

*தமிழ்நாட்டின் எனதருமை சகோதர சகோதரிகளே!*

*வணக்கம்!*

*நம்முடைய தேசத்தின் எல்லைப்புறங்களைப் பாதுகாத்து நாட்டின் இறையண்மையை உயர்த்திப் பிடித்துவரும் நம்முடைய ராணுவத்தின் துணிவுமிக்க ஆண், பெண் வீரர்களுக்கு, இராணுவப் படையினரின் பெருமிதமான கொடிநாள் வணக்கங்களை நாம் சிரம் தாழ்த்தி நன்றியுடன் தெரிவித்துக் கொள்வோம். நமது தேசத்தையும், மக்களையும் பாதுகாப்புடன் வைத்திருக்கும் தன்னலமற்ற சேவை, துணிவு, தியாகம் ஆகியவற்றை நினைவூட்டும் நாளே கொடி நாள் ஆகும்.*

*இந்திய ராணுவம் உலகிலேயே மிகச் சிறந்த ராணுவமாகும். நிபுணத்துவம், வீரம், கடமை கடமையில் அசைக்கமுடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு இந்திய ராணுவம் புகழ் பெற்றது. கிளேசியன் பனி படலப் பகுதிகளாகட்டும், ராஜஸ்தானின் பாலைவனமாகட்டும், வடகிழக்கு மாநிலங்களின் வனங்களாட்டும் அல்லது தொலைதூரத்தில் நம்முடைய கடல்சார் வளங்களைப் பாதுகாப்பதிலாகட்டும் சீருடை அணிந்த நம்முடைய வீரர்கள் ஒவ்வொரு நாளும் தங்களின் அசாதரணமான தைரியத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். எதிரிகளிடமிருந்து பாதுகாப்பது முதற்கொண்டு மனிதாபிமான நடவடிக்கைகள், பேரிடர் கால நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது வரை அவர்களின் சேவைகளுக்கு எல்லையே இல்லை.*

*ராணுவத்தினரின் அசைக்கமுடியாத கட்டுப்பாடு, நிபுணத்துவம் ஆகியவை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் சமீப காலங்களில் உலகிற்குத் தெரியவந்திருக்கிறது. வலுவான உறுதிப்பாடு, சுயகட்டுப்பாட்டுடன் கூடிய நடத்தை, கவனத்துடன் கூடிய தெளிவான வியூகம் ஆகியவற்றுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அமைதி, மோதலை அதிகரிக்காமல் இருப்பது போன்ற விழுமியங்களைப் பாதுகாக்கும் அதே நேரத்தில் நீதி, பொறுப்புணர்வு, அப்பாவி உயிர்களைப் பாதுகாப்பதற்காக மட்டுமே ஊடுருவல்காரர்களை தாக்குவது*

*ஆகியவற்றை நம்முடைய தைரியமிக்க ராணுவத்தினர் மேற்கொண்டனர். நம்முடைய ராணுவ வீரர்கள், கப்பற்படை, விமானப்படை வீரர்கள் துல்லியத்துடனும், தைரியத்துடனும் உணர்திறனுடனும், செயல்பட்டு பாகிஸ்தானுடனான விரைவான நேரடி மோதலில் தீர்க்கமான வெற்றியைப் பெற்றதை உலகம் கண்டது.*

*உலக அரங்கில் இந்தியா உயர்ந்துவரும் வேளையில் ராணுவத்தில் தற்சார்பு நிலையின் மூலம் தேசத்தின் பாதுகாப்பை வலுப்படுத்திக் கொள்வது முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகியிருக்கிறது. மேம்படுத்தப்பட்ட நவீன பீரங்கிகள் ட்ரோன்கள் முதற்கொண்டு கடற்படைக் கப்பல்கள், போர் விமானங்கள் வரையிலும் - ஆத்ம நிர்பர் பாரத் தொலைநோக்கின் மூலம் உள்நாட்டிலேயே ராணுவத் தொழில்நுட்பங்களை வளர்த்தெடுப்பதில் கணிசமான முன்னேற்றங்களை இந்தியா எட்டியுள்ளது. தற்சார்புடைய ராணுவ அமைப்புமுறை நம்முடைய தேசத்தின் பாதுகாப்பை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், இங்கே நம்முடைய மண்ணிலேயே நமது ராணுவத்தின் சிறப்பான திறன்களை உறுதிசெய்வதன் மூலம் ராணுவத்தினரின் தியாகங்களுக்கு உரிய மரியாதையையும் அளிக்கிறது.*

*ராணுவத்தின் கொடிநாள், "ஸம்ரத் பாரத், சக்ஷம் சேனா" திறன் வாய்ந்த இந்தியா, சக்திமிக்க ராணுவம் ஆகியவற்றைப் போற்றுவதற்கான ஓர் அழைப்புமாகும்.*

*சீருடையணிந்து பணிபுரியும் ராணுவ வீரர்களை மட்டுமல்லாது, ஒவ்வொரு சவாலின்போதும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் அவர்களின் குடும்பத்தினரையும் நாம் கௌரவிப்போம். சீருடை வீரர்களின் துணிவிற்கு இன்று நாம் வணக்கம் செலுத்துவோம். ஒவ்வொரு வீரரின் பின்னாலும் அவர்களுக்குத் துணையாக இருக்கும் வீரப்பெண்கள், குடும்பத்தினர் ஆகியோருக்கும் நாம் நமது நெஞ்சம் நிறைந்த போற்றுதல்களைத் தெரிவிப்போம். கண்களுக்குப் புலப்படாத அவர்களின் வலிமையிலும் பொறுமையிலும்தான் தேசத்தின் பாதுகாப்பு அமைந்திருக்கிறது.*

*நம்முடைய ராணுவ வீரர்களுடன் சேர்ந்து ஒன்றுபட்டு நின்று அவர்களைப் பெருமைப்படுத்தவும், அவர்களுக்குத் துணையாக ராணுவத்தினரின் இருக்கவும் கொடிநாளின்போது நமது உறுதி மேற்கொள்வோம். நம்முடைய தேசத்தின் பாதுகாப்பு, மீண்டெழும்*

*தன்மை, தற்சார்பு ஆகியவற்றை வலுப்படுத்த நாம் ஒன்றுபட்டு உழைத்திடுவோம்.*

*இந்த நாளில் கொடி அடையாளம் ஒன்றுடன் மட்டுமே நம்முடைய கூட்டுப் பொறுப்புணர்வை வெளிப்படுத்துவதோடு நின்றுவிடாமல், மிக உயர்ந்த அர்ப்பணிப்புடன் தேசத்திற்கு சேவை செய்துவரும் நம்முடைய படை வீரர்கள், அனுபவம் வாய்ந்த முன்னாள் ராணுவ வீரர்கள், அவர்களின் குடும்பங்களுக்கு அர்த்தமுள்ள ஆதரவை அளிப்பதன் மூலமும் நமது பொறுப்புணர்வை வெளிப்படுத்துவோம். கொடிநாளுக்கான பங்களிப்பின் மூலம் நம்முடைய நீடித்த ஆதரவைப் பெறுவதற்கு தகுதி உடையவர்களாக ராணுவ வீரர்கள் இருக்கிறார்கள். கொடி நாளுக்கு நாம் அளிக்கும் ஒவ்வொரு பங்களிப்பும் நம்முடைய கூட்டுப் பொறுப்புணர்வை வலுப்படுத்தும். ராணுவத்தினரின் கொடிநாள் நிதிக்கு நிதி அளிப்பதின் மூலம் நம்முடைய படைவீரர்களின் கண்ணியத்திற்கும் நலனுக்கும் நாம் துணை நிற்பதுடன், அனுபவம் மிக்க நம்முடைய முன்னாள் படை வீரர்களுக்கும் போரினால் கணவரை இழந்திருப்பவர்களுக்கும் நம்மால் உதவ முடியும்.*

*கொடிநாள் நிதியை முழுமனதுடன் தாராளமாக வழங்குமாறு தமிழ்நாட்டின் நம்முடைய சகோதர சகோதரிகளை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*

*****